**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 177-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW1 | | Examined as : PW 1 | |
| Name | : செல்வநாயகி | Defence | : |
| Father/Husband Name | : பாண்டியன் (எ) முருகபாண்டியன் | Court | : |
| Village | : கீழப்பெரும்பள்ளம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 42/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து டைலர் வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் தெருவில் அங்கு சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அந்த தகராறை நான் வேடிக்கை பார்க்க சென்ற போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் சிக்கி நான் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு அருகில் எனது கொழுந்தனாரான எதிரி நின்றுகொண்டிருந்ததாலும், அவருக்கும் எங்களுக்கும் முதல் நாள் பிரச்சனை ஏற்பட்டிருந்ததாலும் அவர் தான் என்னை தள்ளிவிட்டிருப்பார் என நினைத்து அவர் மீது மிகை படுத்தி புகார் மனு கொடுத்துவிட்டேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் சகோதரர் ஆவார். அவருடன் நான் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 19.02.2024 ம் தேதி மாலை 05.00 மணியளவில் எதிரி எனது வீட்டு வாசலில் நின்றுகொண்டு என்னை தகாத

வார்த்தைகளால் திட்டினாரா என்றால் இல்லை. எனது முடியை பிடித்து இழுத்து என்னை கீழே தள்ளினாரா என்றால் இல்லை. அதை தடுக்க வந்த எனது மாமனாரை எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளினாரா என்றால் இல்லை. கொலை மிரட்டல் விடுத்தாரா என்றால் இல்லை. மேற்கூரிய குற்ற செயல்களை எதிரி செய்ததாக புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் நான் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**